பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 08 வியாழக்கிழமை (24-09-1992) UTHAYAN - A Lively National Tamial Daily கதிர் 301

# சிரேஷ்ட தமிழ் பொலீஸ் அதிபர் கொழும்பில் சுட்டுக் கொலை!

## நேற்று பட்டப்பகலில் சம்பவம்

கொழும்பு, செப்டம்பர் 24

தமிழரான சிரேஷ்ட பொலிஸ் சூப்பிரின்டெண்டன் ஏ. தியோபிலஸ், நேற்றுப் பட்டப் பகலில் கொழும்பில் இனந்தெரியாத துப்பாக்கி இளைஞர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இரு இளைஞர்கள் பொலிஸ் சுப்ரின்டென்டன் பயணம் செய்த காருக்கு மிக அருகில் சென்று தானியங்கித் துப்பாக்கியால் குறி வைத்துச் சுட்டனர். சன சந்தடியும் போக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இளவாலையில் சிக்கிய 6 பேர் நேற்று யாழ். வந்து சேர்ந்தனர்

யாழ்ப்பாணம், செப். 24

கடந்த மாதம் 21ஆம் திகதி இளவாலை, மாதகல் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது இராணுவத்தினரிடம் சிக்கிக் கொண்டவர்களில் 6 பேர் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறையில் இருந்து 'குமண' கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு வந்து அங்கிருந்து செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் அவர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

விடுவிக்கப்பட்டவர்களுள் ஒருவர் பாரிச வாதத்தால் பாதிப்புற்ற நோயாளி.

நாகேந்திரம் (வயது 58) என்ற இந்த நபர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுவதற்காக அங்கிருந்து அனுப்பி வைக்கப்பட்டார்.

மற்றும் இரண்டு வண. பிதாக்கள், மிருசுவிலைச் சேர்ந்த ஆசிரியரான தவப்பிரகாசம், அவரது மகளான வனிதா (வயது 18), தெல்லிப்பளையைச் சேர்ந்த பேரம்பலம் செந்தில்நாதன் (வயது 38) ஆகியோரே விடுவிக்கப்பட்ட ஏனையோராவர்.

விடுவிக்கப்பட்ட வண. பிதாக்களுள் ஒருவர் மீண்டும் தாம் அங்கு திரும்பிச் செல்ல வேண்டும் என்றும்—

அங்கு படையினரிடம் சிக்கிய எமது மக்களின் நலனைக் கவனிக்கவேண்டிய கடமை தமக்குள்ளது என்றும் எமது செய்தியாளரிடம் சொன்னார்.

(உ-3-15-17-165)

## மாதகல், இளவாலைப் பகுதிகள் வனாந்தரம் போல் உள்ளன!

### அங்கிருந்து வந்த மதகுரு தகவல்

மாதகல், இளவாலை மற்றும் இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட பகுதிகள் வனாந்தரம்போல காட்சியளிக்கின்றன. அங்கு மக்கள் நடமாட்டம் இல்லை.

—நேற்று அப்பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த கத்தோலிக்க மதகுரு ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வளர்ப்பு மிருகங்கள் - குறிப்பாக நாய்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## குருநகரிலும் நீர்வேலியிலும் இடைவிடா உண்ணாநோன்பு

யாழ்ப்பாணம், செப். 24

தியாகி திலீபன் நினைவு நிகழ்வுகள் ஒன்பதாவது நாளாக நேற்று குடாநாடெங்கும் பரவலாக உண்ணா விரதம், சிரமதானங்கள் ஆகியவற்றுடன் உணர்வு பூர்வமாக நடைபெற்றன.

குருநகர் தொடர்மாடி முன்றலிலும், நீர்வேலி கந்தசுவாமி கோவிலிலும் இடைவிடா உண்ணாவிரதமிருப்போர் தமது உண்ணா நோன்பைத் தொடர்ந்தனர்.

நல்லூரில் உண்ணா விரதம் அனுஷ்டிப்போர் எண்ணிக்கை நேற்று மிகவும் அதிகரித்துக் காணப்பட்டது. நூற்றுக் கணக்கான மாணவ, மாணவியரும் உண்ணா விரதம் அனுஷ்டித்தனர்.

வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடியில் வருப்புத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த ஏராளமான உறுப்பினர்களும் ஏனையோருடன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கிரஸ் - அ. தி. மு. க. உறுப்பினர் சட்டசபையில் கடும் வாக்குவாதம்

சென்னை, செப். 24

தமிழ்நாடு சட்டசபைக் கூட்டத்தில் இந்திரா காங்கிரஸ் எம். எல். ஏக்கள் ஒரு பகுதியினருக்கும் ஆளும் அ. தி. மு. கழக எம். எல். ஏக்களுக்கும் இடையில் முதல் தடவையாக நேற்று காரசாரமான வாக்குவாதம் இடம் பெற்றது.

அதனைத் தொடர்ந்து சுயேச்சை எம். எல். ஏ தாமரைக்கனி பயன்படுத்திய கண்ணியக் குறைவான வார்த்தையை ஆட்சேபித்து காங்கிரஸ் உறுப்பினர்களில் ஒரு சிலர் சபாநாயகரின் ஆசனத்தின் முன்னால் உட்கார்ந்து தமது எதிர்ப்பைக் காட்டினர்.

மிரட்டினாராம்

அமைச்சர் கண்ணப்பன் அரச கொரடா பட்டாபிராமனும் தம்மை மிரட்டியதாக எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் குற்றஞ் சாட்டும் அளவுக்கும் —

காங்கிரஸ் எம். எல். ஏக்களில் ஒரு பிரிவினர் வேண்டும் என்றே பிரச்சினையைக் கிளப்ப முயல்கின்றார்கள் என்று முதலமைச்சர் ஜெயலலிதா குறைபடும் அளவுக்கும் நிலைமை சென்றது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலியில் கடற்படை சூடு; படகோட்டி காயமுற்றார்

### நேற்று நண்பகல் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 24

கிளாலி - புலோப்பளை கடற்பிராந்தியத்தில் நேற்று நண்பகல் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படகோட்டி ஒருவர் காயமடைந்தார்; படகும், படகு இயந்திரமும் சேதமடைந்தன.

பயணிகள் இன்றி ஓட்டிகளுடன் சுமார் 15 படகுகள் நேற்று நண்பகல் கிளாலியிலிருந்து ஆலங்கேணிப் பக்கமாகச் சென்று கொண்டிருந்த போது இச்சம்பவம் இடம் பெற்றது.

அவ்வேளை பூநகரி—சங்குப்பிட்டி பகுதியிலிருந்து பிரமிக்கப் படகில் வந்த கடற்படையினர், மேற்படி 15 படகுகளையும் கலைத்துக் கலைத்து சுட்டனராம்.

படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்து படகு ஓட்டிகள் கடலில் பாய்ந்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சில்லாலையில் இளைஞர் படையினர் சூட்டுக்குப் பலி!

யாழ்ப்பாணம், செப். 24

வாழைக்குலை வெட்டச் சென்றவர் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

சில்லாலையில் நேற்றுக் காலை இச் சம்பவம் இடம் பெற்றது.

சில்லாலையை சேர்ந்த மேரி யோசப் ஜூட் ஜெயரூபன் (வயது 23) என்பவரே மரணமானவராவார்.

## 10 படை அதிகாரிகள் கொலை குறித்து விசாரணை அறிக்கை வெளிவந்தது

கொழும்பு, செப். 24

பாதுகாப்பானது என்று உறுதி செய்யப்படாத பாதையால் சென்றதாலேயே, அராலியில் உயர் படை அதிகாரிகள் பத்துப் பேரும் அமுக்கக் கண்ணி வெடிக்குப் பலியானார்கள்.

எனவே படை அதிகாரிகள் எந்தக் கட்டத்திலும் பாதுகாப்பானது என்று உறுதி செய்யப்படாத பாதையால் பயணம் செய்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அராலியில் கொப்பேகடுவ, விஜய விமலரத்ன, ஜயமஹா ஆகியோர் உட்பட பத்துப் படை அதிகாரிகள் கொலையுண்ட சம்பவம் குறித்து விசாரணை செய்த தனிநபர் ஆணையாளர் முன்னாள் நீதியரசர் இஸ்மாயில் தமது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

நீதியரசர் தமது அறிக்கையை நேற்று அரசாங்கத்திடம் கையளித்தார்.

பாதையில் புதைக்கப்பட்டிருந்த அமுக்கக் கண்ணிவெடி மீது 11 பேர் பயணம் செய்த "லாண்ட்றோவர்" ஏறியதால் அது வெடித்தது என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

கண்ணிவெடி வெடித்த இடத்தில் கண்டெடுக்கப்பட்ட உலோகம் அமுக்கக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமா பாக். புறப்பாடு

கொழும்பு, செப். 24

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவும் அவரது பாரியாரும் நேற்று பாகிஸ்தானுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

இஸ்லாமாபாத் சர்வதேச விமான நிலையத்தில் இவர்கள் சென்று இறங்கிய சமயம் பாகிஸ்தான் ஜனாதிபதி குலாம் இஸாக்கானும் அவரது பாரியாரும் பிரேமதாஸ தம்பதியினரை வரவேற்றனர்.

ஜனாதிபதி பாகிஸ்தானுக்கு விஜயம் செய்ததை அடுத்து பதில் பாதுகாப்பு அமைச்சராக திரு. டி. பி. விஜேதுங்காவும், பதில் கல்வி அமைச்சராக ஏ. சி. எஸ். ஹமீதும் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். இவர்கள் இருவரும் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட வைபவமும் நேற்று சபாநாயகரால் விமான நிலையத்திலேயே நடத்தி வைக்கப்பட்டது.

ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன், வெளியுறவுச் செயலாளர் பேர்னாட் திலகரத்னா ஆகியோரும் ஜனாதிபதியுடன் பாகிஸ்தான் சென்றுள்ளனர்.

இதற்கிடையில் இலங்கை

(6 ஆம் பக்கம் பார்க்க)

**சூழல் பேணின் வாழ்வு நீளும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவருக்கான

# தபால் அடையாள அட்டைகள் இனி யாழ்ப்பாணத்திலேயே

அரியாலை, செப். 24

பாடசாலை மாணவர்களுக்கு தபால் திணைக்களத்தினால் வழங்கப்படும் அடையாள அட்டைகள் இனிமேல் யாழ்ப்பாணத்திலேயே வழங்கப்படும்.

வடபிராந்திய பிரதித் தபால் மா அதிபர் அலுவலகம் இந்த மாதத்தில் இருந்து மாணவர் அடையாள அட்டைகளை வழங்குமென்றும், இனிமேல் விண்ணப்பங்களை கொழும்புக்கு அனுப்ப வேண்டியதில்லை என்றும் பிரதித் தபால் மா அதிபர் திரு. எஸ். எம். சேதுகாவலர் தெரிவித்தார்.

விண்ணப்பங்கள் கிடைத்த இரண்டு வாரங்களில் மாணவர்களுக்கு அடையாள அட்டைகளை அனுப்பி வைப்பதற்கு ஏற்ற விதத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

வடபகுதியில் பாடசாலை மாணவர்கள் தமக்குரிய அடையாள அட்டைகளுக்குக் கொழும்புக்கு விண்ணப்பித்துவிட்டு மாதக் கணக்கில் காத்திருப்பதுண்டு. [அ-17]

## இளவாலை - மாதகலுக்கு செஞ்சிலுவை அதிகாரிகள்

யாழ்ப்பாணம், செப். 24

சமீபத்தில் இராணுவ நடவடிக்கையின் போது இளவாலை, மாதகல், அளவெட்டிப் பகுதிகளில் சிக்கியுள்ளவர்களை நேரில் சந்திக்க செஞ்சிலுவை சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் அங்கு சென்றுள்ளனர்.

[6 ஆம் பக்கம் பார்க்க]

# மாதகல், இளவாலைப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தன் — ஆங்காங்கே நடமாடுகின்றன ஏனைய கால்நடைகளை படையினர் பிடித்து தமக்கு உணவாக்கி வருவதால், அவற்றின் எண்ணிக்கை குறைந்து வருகிறது.

வளர்ப்போர் இல்லாமல் அலைந்து திரியும் நாய்கள் அங்குள்ளவர்களைக் கடிக்க எத்தனிக்கின்றன; பலர் நாயினால் கடியுண்டுள்ளனர்;

## படையினரிடம் சிக்கியுள்ள பலர் மனோநிலை பாதிப்புற்ற நிலையில்!

மாதகல், இளவாலை, சேந்தாங்குளம், அளவெட்டி, தையிட்டி, போயிட்டி பகுதிகளை உள்ளடக்கி இளைஞர், சிறுவர், சிறுமியர், குழந்தைகள், வயோதிபர் என சுமார் ஐநூறு பேர் வரை படையினரிடம் சிக்கி உள்ளனர்.

பலர் தத்தமது வீடுகளில் உள்ளனர்.

ஒரு பகுதியினர் இளவாலையில் உள்ள மடம் ஒன்றில் தங்கியுள்ளனர்.

அனேகமானோர் தமது உறவினர்களைப் பிரிந்து சிறையில் வாழ்வது போன்ற நிலையில் மனோநிலை பாதிக்கப்பட்டவர்களாக காலத்தை ஓட்டுகின்றனர்; பலர் பீதியுடன் காணப்படுகின்றனர்.

## மருந்து, மருத்துவ வசதிகள் இல்லை

படையினரிடம் சிக்கியுள்ளவர்களில் பலர் நோயாளிகளாக உள்ளனர்.

ஆரம்பத்தில் பலாலி இராணுவ ஆஸ்பத்திரி மருத்துவர்கள் மூலம் அவர்களுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது.

ஆனால் இப்போது உரிய மருத்துவ வசதியோ, மருந்துகளோ இன்றி அவர்கள் கஷ்டப்படுகின்றனர்.

சில நோயாளிகள் அநுராதபுரம், கொழும்பு ஆஸ்பத்திரிகளுக்குப் படையினரால் அனுப்பி வைக்கப்பட்டனர். எஞ்சிய நோயாளரை யாழ்ப்பாணம் அனுப்பி வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## இரட்டைக் குழந்தைகளில் ஒன்றை இழந்து தனித்து வாழும் இளம்தாய்!

இளம் பெண் ஒருவர் தனது இரட்டைக் குழந்தைகளில் ஒன்றைப் பிரிந்த நிலையில் கண்ணீரும் கம்பலையுமாக காலத்தைக் கழித்து வருகிறார்.

அவர் தமது மச்சினம் குழந்தைகளில் ஒன்றையும் உறவினர்களையும் இராணுவ நடவடிக்கையின்போது விட்டுப் பிரிந்த நிலையில் அநாதைபோல நாட்களைக் கழிக்கிறார்.

தன்னுடன் உள்ள சிசுவுக்கு பால் ஊட்டும் போது மற்றைய சிசுவை எண்ணி அழுவது மிகவும் பார்க்கப் பரிதாபமானதும் மனதை உருக்கும் காட்சியுமாகும்.

## அதிகமானோர் அரைப்பட்டினி!

அங்குள்ள மக்களுக்கு போதிய உணவு வசதி இல்லை.

படையினரால் அப்பகுதியில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை ஒன்று திறக்கப்பட்டுள்ளது. அங்குள்ள ஒருவரை முகாமையாளராக நியமித்துள்ளனர்.

இக்கிளை மூலம் அத்தியாவசியப் பொருள்கள் வாராந்தம் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆனால் அவை மூன்று தினங்களுக்குக் கூடப் போதுமானவையல்ல. அதனால் அதிகமானோர் அரைப் பட்டினி நிலையில் உள்ளனர்.

## பாடசாலையும் இயங்குகிறது

படையினரிடம் சிக்கியவர்களில் சுமார் ஐம்பது பேர் இளைஞர், யுவதிகள் ஆவர்.

எல்லா வகுப்பிலும் பயில்வோரை உள்ளடக்கி சுமார் 48 மாணவர்கள் உள்ளனர். ஆசிரியைகள் உட்பட ஏழு ஆசிரியர்களும் சிக்கியுள்ளனர்.

இந்த ஆசிரியர்களைக் கொண்டு 48 மாணவர்களுக்கும் சென். ஹென்றீஸ் பாடசாலையில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இவர்களுக்கான பரீட்சைகள், பொதுப் பரீட்சைகள் ஆகியவை அங்கேயே நடைபெறும் என படை அதிகாரிகள் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

தற்போது அங்கு சிக்கியுள்ளவர்களில் அருட் சகோதரிகள் 25 பேர், அருட் சகோதரர் ஒருவர், வண. பிதாக்கள் மூவர் ஆகியோரும் அடங்குகின்றனர்.

## வீடுகள், தேவாலயங்கள் சூறை!

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் உள்ள அனைத்து வீடுகள், ஆலயங்கள் ஆகியவை சூறையாடப்பட்டுள்ளன.

பெறுமதிமிக்க பொருள்கள், பணம், நகைகள் ஆகியவற்றைப் படையினர் எடுத்துச் சென்றுள்ளனர்.

சைவ ஆலயங்கள், தேவாலயங்கள் ஆகியவற்றின் கதவுகள் கூட உடைக்கப்பட்டுள்ளன.

பொருள்கள் வீதிகளிலும், வளவுகளிலும் தாறுமாறாக வீசப்பட்டுக் கிடக்கின்றன.

## அநாதரவான வயோதிபரின் சடலம் புழுப்பிடித்த நிலையில்!

நடமாட முடியாத வயோதிபர்கள் பலர் இராணுவ நடவடிக்கைகளை அடுத்து அப்பகுதியில் உள்ள வீடுகளில் தனித்து சிக்கிப் போயிருப்பதாகக் கருதப்படுகிறது.

அவ்வாறு சிக்கியோர் உணவு மற்றும் பராமரிப்பு வசதியின்றி வீடுகளுக்குள்ளேயே இறந்திருக்கக்கூடும் என்றும் அஞ்சப்படுகிறது.

இவ்வாறு உயிரிழந்த வயோதிபர் ஒருவரின் சடலம் புழுப்பிடித்து அழுகிய நிலையில் கிடந்தது.

பிணவாடை வீசியதை அடுத்து அப்பகுதிக்குச் சென்ற படையினர் அதனைக் கண்டுபிடித்தனர்.

இதனையடுத்து நாம் அந்த வீட்டுக்குச் சென்று அந்தச் சடலத்தை வெளியே எடுத்து தகனம் செய்தோம்.

இப்படி இன்னும் எத்தனை பேர் இறந்து கிடக்கிறார்களோ தெரியவில்லை.

இளவாலைப் பகுதியில் பொலிஸ் நிலையம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பைச் சேர்ந்த [illegible] சிலர் இந்த பொலிஸ் நிலையத்தில் கடமை புரிகின்றனர் — என்று [illegible] மேலும் தெரிவித்தார். [உ-15-3]

# தமிழக சட்ட சபையிலிருந்து திருநாவுக்கரசு வெளிநடப்பு

தமிழக சட்டசபைக் கூட்டத்தில் இருந்து முன்னாள் மாநில அமைச்சர் திருநாவுக்கரசு நேற்று வெளிநடப்புச் செய்தார்.

திருநாவுக்கரசு எந்தக் கட்சியிலும் சேராத உறுப்பினராக சட்டசபையில் இருக்கிறார் என்று சபாநாயகர் கூறியிருப்பது பற்றி விவாதம் நடத்த வேண்டும் என்று திருநாவுக்கரசு நேற்று சபாநாயகரைக் கேட்டுக் கொண்டார்.

அதற்கு அனுமதி அளிக்க சபாநாயகர் மறுத்ததுடன், "அண்ணா புரட்சித் தலைவர் அ. தி. மு. க" என்ற கட்சியின் சார்பில் உறுப்பினராக சட்டசபைக்கு வந்த திருநாவுக்கரசு பின்னர் அந்தப் பெயரை மாற்றிவிட்டு "எம். ஜி. ஆர் அ. தி. மு. க." என்ற பெயரில் கட்சி வைத்துள்ளார் என்று குறிப்பிட்டார்.

எம். ஜி ஆர் அ. தி. மு. க. என்ற பெயர் தேர்தல் அதிகாரியால் அங்கீகரிக்கப்படவில்லை என்றும் அதனால் திருநாவுக்கரசு சுயேச்சை உறுப்பினராகவே கருதப்படுகின்றார் என்றும் சபாநாயகர் கூறினார்.

இதைத் தொடர்ந்து திருநாவுக்கரசு சபையில் இருந்து வெளியேறினார். (இ-எ)

# விசேட நீதிவானின் உத்தரவு உயர் நீதிமன்றால் தள்ளுபடி

சென்னை, செப். 24

ஊழல் குற்றச் சாட்டுகள் தொடர்பாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டு ஆஜர் செய்யப்பட்ட தமிழ்நாடு சட்டசபை உறுப்பினரும் முன்னாள் மாநில அமைச்சருமான திருநாவுக்கரசை விடுதலை செய்து விசேட நீதிவான் பிறப்பித்த உத்தரவை சென்னை உயர்நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தது.

விசேட நீதிவானின் தீர்ப்பை ரத்துச் செய்ய வேண்டும் என்று தமிழக அரசு சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீட்டு மனுவை உயர் நீதிமன்ற நீதியரசர் எஸ். ஜனார்த்தனம் நேற்று அனுமதித்துத் தீர்ப்பு வழங்கினார்.

தம் மீது சுமத்தப்பட்ட ஊழல் குற்றச் சாட்டு வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை ரத்துச் செய்ய வேண்டும் என திருநாவுக்கரசு தாக்கல் செய்த மனுவையும் உயர் நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தது.

இதேவேளை—

திருநாவுக்கரசு மீதான ஊழல் குற்றச்சாட்டு வழக்கை தொடர்ந்து விசாரணை செய்யலாம் என்றும் உயர் நீதிமன்ற நீதியரசர் எஸ் ஜனார்த்தனம் விசேட நீதிவானுக்கு உத்தரவிட்டார்.

திருநாவுக்கரசு மீது மாநில அரசு தொடர்ந்த ஊழல் குற்றச்சாட்டு வழக்கு காலாவதியான சட்டத்தின்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கூறி விசேட நீதிவான், தம் முன்னர் ஆஜர் செய்யப்பட்ட திருநாவுக்கரசை காவலில் வைக்காது விடுதலை செய்து உத்தரவிட்டது தெரிந்ததே.

அதனை ஆட்சேபித்தே தமிழக அரசு மேன்முறையீடு செய்திருந்தது. [இ-எ]

## ஆலய உற்சவங்கள்

யாழ்ப்பாணம், செப். 24

சரித்திரப் பிரசித்திபெற்ற யாழ்ப்பாணம், வண்ணை, ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 27 ஆம் திகதி ஆரம்பமாகிறது. கொடியேற்றம் அன்று காலை 10 மணிக்கு இடம்பெறும்.

எதிர்வரும் அக்டோபர் 5 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9.15 மணிக்கு தேர்த் திருவிழாவும், அடுத்த நாள் முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

★ ★ ★

சரித்திரப் பிரசித்திபெற்ற பருத்தித்துறை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை மறுதினம் 25 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

அக்டோபர் பத்தாம் திகதி தேர்த் திருவிழாவும் 11, 12 ஆம் திகதிகளில் முறையே சமுத்திர, கேணித் தீர்த்தோற்சவங்களும் இடம்பெறும்.

[அ-51-31-17]

## ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம் செப். 24

காரைநகர் இராணுவ முகாமில் இருந்து நேற்று மாலை 3 மணிக்கு பொன்னாலைப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

(இ-15)

**MODERN EDUCATION CENTRE**
KARAVEDDY

A/L 93 மீட்டல் வகுப்புக்கள்

ஆரம்பம் : 29 – 09 – 1992

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. லோகசிங்கம் |
| கணக்கியல் | — திரு. பவான் |
| வர்த்தகம் | — திரு. கணேசன் |
| அளவையியல் | — திரு. விக்கி |
| இந்துநாகரிகம் | — திரு. ஜோதீஸ்வரன் |
| தமிழ் | — திரு. நடா |

[25652]

**MODERN EDUCATION CENTRE**
POINTPEDRO.

A/L 93

பகல் நேர வகுப்புக்கள்
(கலை, வர்த்தகம்)

ஆரம்பம்: 29-09-92 காலை 10.00 மணி.
(வழமையான ஆசிரியர் குழு)

[22653]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை யாழ்ப்பாணம்

காணாமற் போனவர்களில்

# மேலும் அறுபது தமிழர்கள் கிழக்கில் கண்டுபிடிப்பு!

## அதிரடிப்படை முகாம்களில் உள்ளனர்

கொழும்பு, செப். 24

கிழக்கு மாகாணத்தில் காணாமற் போனதாகக் கருதப்பட்ட மேலும் அறுபது பேர் அக்கரைப்பற்று, காரைதீவு, கல்முனை ஆகிய இடங்களிலுள்ள அதிரடிப்படை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை மனித உரிமைகள் செயலணிக் குழு கண்டுபிடித்தது.

செயலணிக் குழுவின் தலைவரான முன்னாள் நீதியரசர் ஜே எவ் ஏ சூஸா தனிப்பட்ட முறையில் இந்த முகாம்களுக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது இந்த அறுபது பேரும் கண்டுபிடிக்கப்பட்டவர்.

இறந்துவிட்டதாக உறவினர்களால் கருதப்பட்ட பலரை செயலணிக் குழுத் தலைவர் அதிரடிப்படை முகாம்களில் கண்டுபிடித்தார்,

கண்டுபிடிக்கப்பட்ட இந்த அறுபது பேரில் இரு இளம் தமிழ்ப் பெண்கள் உட்பட அனேகமானோர் தமிழர்கள். 16, 17 வயதுடைய இரு சிங்கள இளைஞர்களும் கண்டுபிடிக்கப்பட்டவர்களில் அடங்குவர்.

ஏற்கனவே கிழக்கு மாகாணத்தில் காணாமற் போனதாகக் கருதப்பட்ட 733 பேரை மனித செயலணிக் குழு கண்டுபிடித்தது தெரிந்ததே

கடந்த 10 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை தாம் தனிப்பட்ட முறையில் மேற்படி அதிரடிப்படை முகாம்களுக்கு விஜயம் செய்தபோது இவர்களைக் கண்டுபிடித்ததாக திரு. சூஸா தெரிவித்தார். (உ-10)

திலீபன் நினைவாக

# இன்று இடம்பெறும், சிரமதானப் பணிகள்

தியாகி திலீபனின் 5 ஆம் ஆண்டு நினைவையொட்டி, இன்று சிரமதானப் பணிகள் இடம்பெறவுள்ள இடங்கள் பற்றிய விவரம் வருமாறு;

நீவைக்கோட்டம்— வைதடி சி. எம். எஸ் பாடசாலையில் அப்பகுதி மக்களால் சிரமதானம் மேற்கொள்ளப்படும்.

வலிகாமம் கோட்டம்— திருநெல்வேலிச் சந்தி துப்புரவு செய்யப்படும்.

தென்மராட்சிக் கோட்டம்— மந்துவில் பாடசாலை, ஆரம்பசுகாதார நிலையம் என்பன அப்பகுதி மக்களால் துப்புரவு செய்யப்படும்.

இதே வேளை— கடற்புலிகளின் அனுசரணையுடன், வல்வெட்டித்துறை சந்திக்கு அருகாமையில் உண்ணாவிரதமும் அஞ்சலிக் கூட்டமும் இடம்பெறும். (த-144)

# ஆந்திர முதல்வர் ரெட்டி பதவி விலகுவதாக அறிவிப்பு!

ஹைதராபாத், செப். 24

ஆந்திர மாநில இந்திரா காங்கிரஸ் முதலமைச்சர் ஜனார்த்தன் ரெட்டி தாம் பதவி விலகுவதாக காங்கிரஸ் மேலிடத்துக்கு அறிவித்துள்ளார்.

மாநில சட்டசபையில் தற்போதைய வரவு செலவுத் திட்டக் கூட்டத் தொடர் முடிந்த கையோடு பதவி விலகல் கடிதத்தை தம்மிடம் சமர்ப்பிக்குமாறு காங்கிரஸ் தலைவர் பி. வி. நரசிம்மராவ், ஜனார்த்தன் ரெட்டியைக் கோரியுள்ளார்.

மாநில காங்கிரஸில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்குத் தீர்வு காணுமுகமாகவே ஜனார்த்தன் ரெட்டியைப் பதவி விலகுமாறு கேட்கப்பட்டது. (உ-எ)

# தென்பகுதி சிறைகளில் காவலில் உள்ளோர் விவரம்

யாழ்ப்பாணம், செப். 24

மகஸீன் சிறைச்சாலையிலும், களுத்துறை சிறைச்சாலையிலும் காவலில் வைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாண மாவட்டத்தையும், வெளி மாவட்டங்களையும் சேர்ந்தோரின் பெயர் விவரங்கள் கொண்ட பட்டியல்களை யாழ். அரச அதிபர் வெளியிட்டுள்ளார்.

அரச அதிபர் கொழும்பு சென்றிருந்த சமயம் சம்பந்தப்பட்ட சிறைச்சாலைகளின் அதிகாரிகளிடம் பெற்ற பெயர் விவரங்களை அவர் பட்டியற்படுத்தி வெளியிட்டிருக்கிறார்.

மகஸீன் சிறைச்சாலையில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 26 பேரின் விவரங்களும், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 18 பேரின் விவரமும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 16 பேரின் விவரமும் முழு விலாசங்களுடன் உள்ளன.

அதேபோல களுத்துறைச் சிறையில் உள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 76 பேரினதும், வெளிமாவட்டங்களைச் சேர்ந்த 15 பேரினதும் விவரங்கள் முழுவிலாசங்களுடன் உள்ளன.

அரச அதிபர் வெளியிட்ட பட்டியல்களை இல 15, இரண்டாவது ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள உதயன் விளம்பரப் பணிமனையில் வாசகர்கள் பார்வையிடலாம். (அ)

## கோட்டையில் புலிக்கொடி:

# திலீபனின் கனவை நாம் நனவாக்கினோம் - புலியரசன்

குருநகர், செப். 24

"தியாகி திலீபன் உயிரோடு வாழ்ந்த காலத்தில் யாழ் கோட்டையில் புலிக்கொடி பறக்கும் நாளை ஆவலோடு எதிர்பார்த்திருந்தான். திலீபனின் நிதர்சனக் கனவை நாம் நனவாக்கினோம்."

கடந்த திங்கட்கிழமை மாலை குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற அடையாள உண்ணாவிரத முடிவில் நடைபெற்ற நினைவஞ்சலிக் கூட்டத்தில் பேசிய கடற்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாக உப பொறுப்பாளர் திரு. புலியரசன் மேற்கண்டவாறு கூறினார்.

குருநகர் பிரதேச கடற்புலிகள் பொறுப்பாளர் திரு. சிவலிங்கம் தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

அவர் தொடர்ந்து பேசுகையில் —

எமது தேசத்தை மீட்கும் களத்தில் நிற்பவர்கள் 11 வயதுக்கும் 20 வயதுக்கும் உட்பட்டவர்கள், எதிரி தரப்பிலோ 30 வருடம் இராணுவ அனுபவம் வாய்ந்தவர்கள். இதனை எமது முதிய சமுதாயம் எந்த உணர்ச்சியும் இல்லாமல் அனுமதித்துள்ளது — என்றார்.

குருநகர் பிரதேச கடற்புலிகள் பொறுப்பாளர் திரு. சிவலிங்கம் தலைமையுரையில் —

தியாகி திலீபன் மறைந்து விட்டாலும் இந்த மண்ணின் மக்கள் மனங்களில் இருந்து என்றைக்கும் அவன் அழிந்து விடமாட்டான் என்பதை தொடராக நடைபெறும் நினைவு நிகழ்வுகள் காட்டுகின்றன. தமிழர்களுக்கும் இந்த உலகில் உரிமை உண்டென்பதை உலகிற்கு எடுத்துக் காட்டிய தியாகி திலீபன் — என்றார்.

வலி-கிழக்குப் பிரிவு கடற்புலிகள் பொறுப்பாளர் திரு சங்கீதன் "தியாகி திலீபன் இந்த உலகின் புரட்சித் தியாகி" — என்றார். (ஒ-51)

# 13 சோதனை முகாம்கள்

சென்னை, செப் 24

தமிழ்த் தீவிரவாதிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் தமிழகத்தில் பரம்புக்குடி, கீழ்க்கரை பகுதிகளில் மேலும் பல சோதனை முகாம்களை தமிழக அரசு அமைத்துள்ளது.

இவற்றையும் சேர்த்து அப்பகுதிகளில் 13 சோதனை முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. (ஒ-ம)

# சுன்னாகம் லயன்ஸ் உதவி

மயிலணி, செப் 24

அண்மைய இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து சுன்னாகம் பகுதியில் தங்கியிருக்கும் மக்களுக்கு சுன்னாகம் லயன்ஸ் கழகம் உடு துணிகளை வழங்கி வருகின்றது.

சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை, சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயம் மற்றும் சுன்னாகம் ஐயனார் கோவில் ஆகிய இடங்களில் தங்கியிருக்கும் மக்களுக்கே உடுபுடைவைகள் வழங்கப்பட்டன. (த-89)

# சிவாஜி கண்டனம்

சென்னை, செப். 24

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராம்தாஸ் மற்றும் பண்ருட்டி இராமச்சந்திரன் உட்பட நான்கு தலைவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளதை தமிழ்நாடு ஜனதா தள் பிரிவு கண்டித்துள்ளது.

அவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் எனவும், இதன்மூலமே தமிழகத்தில் சட்டம் ஒழுங்கைப் பேண முடியும் எனவும் கட்சியின் தமிழ் நாட்டுப் பிரிவுத் தலைவர் சிவாஜிகணேசன் தமிழக அரசைக் கேட்டுள்ளார். (ஒ-ம)

# ஈழத் தமிழர் நலன் காக்கும் கடப்பாடு இந்தியாவுக்கு உண்டு

## இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து தூதுவர் ஜா

இலங்கைத் தமிழரின் நியாயபூர்வ நலன்களை அங்கீகரிக்கும் தீர்வுக்கு உதவும் கடப்பாடு உள்ளதாகவே இந்தியா இருந்து வருகின்றது.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் என். என். ஜா ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியத் தூதரகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் இத்தகவல் வெளியிடப்பட்டது.

"இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதா இல்லையா என்பது இலங்கை முடிவு செய்ய வேண்டிய விஷயமாகும்.

"இனப்பிரச்சினைக்கு ஐக்கியப்பட்ட இலங்கைக் கட்டமைப்புக்குள் ஒரு தீர்வைக் காணவேண்டும் என்பதே எமது கருத்து.

"1987 இந்திய - இலங்கை ஒப்பந்தமும் அதனுடன் சம்பந்தப்பட்ட விஷயங்களும் தொடர்ந்தும் செல்லுபடியானவையாகவே இருக்கின்றன.

"இலங்கையும் இந்தியாவும் நெருங்கிய பிணைப்புகளையும் அன்பு வரலாற்றையும் கொண்ட அயல் நாடுகள் ஆகும்.

—இவ்வாறு திரு. ஜா கூறினார் என்று இந்திய தூதரக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக நேற்று முன்தினம் கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்றில் வெளியிடப்பட்டுள்ளது. (ஒ-எ)


# கலை, வர்த்தக கல்லூரி

C. C. A.

A/L – 93
Day Classes

பிரிவு - II

பொருளியல் — திரு. உதயன்
கணக்கியல் — திரு ஸ்ரீ
வர்த்தகம் — பிரபல ஆசிரியர்
அளவையியல்— திரு. சயந்தன்
இந்து நாகரிகம் திரு. ஜோதீஸ்வரன்

குறிப்பு:
1. வாரத்தில் நான்கு நாட்களும் வகுப்பு நடைபெறும்.
2 எல்லா அலகுகளுக்கும் ஒரே கட்டணம் அறவிடப்படும்.

பிரிவு I அனுமதிகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளன

பிரிவு - II
ஆரம்பம்: 29-09-1992
முன்கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும். நேர அட்டவணையை அலுவலகத்தில் பெறலாம்.

- நிர்வாகி.

(சி-3515)



# நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

A/L 93
App. — மூட்டிய கோல்
Pu — வரையிட்டின் - பிரயோகம்

ஆரம்பம்:
27 — 09 — 1992
ஞாயிறு 4 மணி


A/L 94
App — வேக நேர - வளையி
Pu, — மீதித் தேற்றம்

திரு. கமலசிங்கம்

ஆரம்பம்:
24 — 09 — 1992
வியாழன் 3 மணி

(ஜ-3513)


# 27 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 16 — 11 — 1913

இறைவன் அடியில்: 24 — 09 — 1965

## ஞானப்பிரகாசம் நல்லையா

(பிரபல அந்திய கால சேவை (சிற்றி பியூறல் சேவிஸ்), ஸ்தாபகர்)

என்றும் எமது நினைவில் நீங்கா இடம் பெற்றுள்ளீர்கள்.

இதன் நினைவாக 'கோவில் வீதி' ஆச்சிரம தேவாலயத்தில் இரக்கப்பூசைப் பூசை இன்று (24-09-1992) காலை 6-30 மணிக்கு நடைபெறும். உற்றார், உறவினர்களை பங்குபற்றும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

'ஒளி இல்லம்',
210, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

(5343)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புறொய்லர் குஞ்சுகள், கறுப்பு, சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. இல 1, மத்திய சந்தை, மானிப்பாய்.
(22617)

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் வெற்றியீட்டுமா? விவாகம் நடைபெறுமா? கேட்டுப் பாருங்களேன்! தினமும் காலை (8-30 — 12-30) த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், இல. 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு, கிளை இல. 249, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (தினமும் பிற்பகல் 3-00 முதல் 6.00வரை).
(22606)

விவாகத் தடை, தொழில் தடை, கல்வித்தடை போன்ற துர்அதிர்ஷ்டங்கள் நீங்க அதிர்ஷ்டம் அழைக்கிறது. சாதகத்துடன் நேரில் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப்பெற உத்தரவாதம். ஸ்ரீசக்தி உபாசகர் ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், இல: 96, கோவில் வீதி, (கைலாசபிள்ளையார் கோவில் சந்தி), நல்லூர்.
(22631)

## கலர் புகைப்படங்கள்

எங்கள் ஸ்ரூடியோவில் யாழ். பட்டமளிப்பு விழா கலர் படங்கள் எடுத்தவர்களின் படங்கள் தயாராகவுள்ளன. அவற்றை எடுத்துச் செல்லும்படி அன்புடன் கேட்கின்றோம். ஞானம்ஸ் ஸ்ரூடியோ.
(சி-3296)

## யந்திரம்

கடன், வறுமை நீங்க, வியாபார விருத்திக்கு ஸ்ரீமகாலட்சுமி யந்திரம், அஷ்டலட்சுமி யந்திரம், இடையூறு, தடைகள் நீங்க பிள்ளையார், முருகன் ரட்சை யந்திரங்கள் எல்லாத் தெய்வங்களுக்குமுரிய யந்திரங்கள் எம்மிடம் பெறலாம். ஸ்ரீசக்தி கணேஷ உபாசகர் ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், இல 96, கோவில் வீதி, நல்லூர்.
(22632)

## நல்லினத் தோடை

விளாத்தியில் ஒட்டிய, ஒரு வருடத்தில் பலன் தரும், திடகாத்திரமான, சிறந்த இனத் தோடங்கன்றுகள் விற்பனைக்கு உண்டு இடம்: துரைஐயா, நிலாவிரையடி, நவக்கிரி, புத்தூர். (4979)

## இலவச திருமண சேவை

26 வயது, உத்தரம்1 கிரகபாவம் 2, A/L படித்த ஜேர்மனியில் தொழில் புரியவருக்கு மணமகள் தேவை. திருமணம் இலங்கையில் செய்யலாம், தொடர்பு: ஞானவிருகாலையில். து. ஐயலா, யாழ். நாச்சிமார் கோவிலடி.
(22623)

## A/L மாணவர்களுக்கு

இந்துநாகரிகம் இதழ் – 8 வெளிவந்து விற்பனையாகிறது. ஆக்கம்: க.சி. குலரத்தினம், பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
(சி-3506)

## 555 படையினர் உயிரிழப்பு

இவ்வருடம் ஏப்ரல் மாதம் முதல் இதுவரை வடக்கு-கிழக்கில் உயிரிழந்த படையினரின் எண்ணிக்கை 555.

சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டார் என வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

---

# G. A. Q. 1993/94

## பேராதனை

பல்கலைக்கழகம் வெளிவாரி பட்டப்படிப்பிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

★ இதற்கான பல்கலைக்கழகப் பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

விரிவுரைகள் ஆரம்பம்: 27 - 09 - 1992

விண்ணப்பப் படிவம், நேர அட்டவணை போன்ற விவரங்களை நேரில் பெற்றுக் கொள்ளவும்.

நிர்வாகி,
எஸ். அருள்நங்கை.

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி-3505)

---

# வடபகுதிக்கு போதிய மருந்து ஏன் அனுப்பப்படவில்லை?

## ந. ச. ச. கட்சி பிரதிநிதி கேள்வி

கொழும்பு, செப். 24

வடக்கு — கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான அமைச்சு மட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் வடபகுதிக்கு போதியளவு மருந்துப்பொருட்கள் அனுப்பி வைக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. ஆனால் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாதது ஏன்?

ஒருங்கிணைப்புக் குழுவில் அங்கம் வகிக்கும் நவசமசமாஜக் கட்சிப் பிரதிநிதி ஒருவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

சுகாதார மகளிர் விவகார அமைச்சின் செயலாளருக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றிலேயே இவ்வாறு கேட்கப்பட்டுள்ளது.

போதுமான மருந்துப் பொருள்களை விரைவாக அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ். அரச அதிபரிடம் இருந்து வந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று மாதங்களாக அங்கு ஒழுங்கான மருந்து விநியோகம் எதுவும் செய்யப்படவில்லை.


போதிய மருந்துப் பொருள்கள் இல்லாமையால் யாழ்ப்பாணத்தில் தவிர்க்கப்படக் கூடிய மரணங்கள் தொடர்ந்து நிகழ்கின்றன.

இவ்வாறு அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-5)

---

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 14 — 01 — 1965
மறைவு: 11 — 07 — 1992

செல்வன்
## இராசதுரை இராசநாயகம்
(இராசன்)
(திருநெல்வேலி, பாற்பண்ணை ஊழியர்)

எமது இதயங்களில் அணையா விளக்காய் பிரகாசிக்கும் இராசனின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;

தாய், சகோதரர்கள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.
(5340)

---

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 09 — 04 — 1951
மறைவு: 01 — 10 — 1986

## சியாமளா புஸ்பராசா
(விஞ்ஞான ஆசிரியை)

அன்பின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய்,
கலங்கரை விளக்காய் ஒளி தந்து வாழ்ந்த
குடும்பத்தின் குலவிளக்கே - நீ
மின்னாமல் முழங்காது கடிதென எங்கு சென்றாய்?
ஆண்டாறு போனாலும் ஆறாது எம் துயரம்.


அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

கணவன், மகன்,
குடும்பத்தினர்.

18, முள்ளி வீதி,
அரியாலை
(22647)

---

# 47 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 18 — 02 — 1949
மறைவு: 09 — 08 — 1992

## அமரர் செ. தேவராசா (யூட்)
(உரிமையாளர்: ஸ்ரீ முருகன் மெடிக்கல் ஸ்ரோர்ஸ், மூளாய்)

திதி: 24-09-1992

எங்கள் குடும்பக் குலவிளக்காய், திருவுருவாய், அன்புச்சுடராய், அன்பின் பிறப்பிடமாய் வாழ்ந்த அன்புத் தெய்வமே! எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு எங்குதான் சென்றீர்கள்?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


இன்று 24-9-92 எமது இல்லத்தில் நடைபெறும் வைபவத்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு மிக அன்புடன் வேட்டுக்கொள்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், சகோதரர்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தொல்புரம், சுழிபுரம்,
மூட்டுச்சந்தையடி.
(5339)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 08 — 10 — 1928
உதிர்வு: 24 — 09 — 1991

## முடியப்பு அந்தோனிப்பிள்ளை
(மயிலிட்டி)

இல்லமிழந்தோம் இயற்றிய செல்வமிழந்தோம்
ஊரிழந்தோம் உற்றார் தனைப் பிரிந்தோம்
கொழு கொம்பாய் நின்ற கோமகனே இறுதியில்
உங்களையும் இழந்து உதவியின்றி நிற்கின்றோம்
எழிலான உங்கள் முகம்
எப்போ நாம் இனிக் காண்போம்
கண்ணீரை உங்கள் பாதம்
காணிக்கையாக்குகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பிள்ளையார் கோவிலடி,
மயிலிட்டி.
(22643)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## தொண்டமானின் அபசகுனம்!

ஈழத் தமிழர்கள் தமது தேசியத்தையும், தனித்துவத்தையும், பாதுகாத்து, கௌரவமான சுதந்திரமான மக்களாக வாழ வேண்டும் என்ற அபிலாசையுடனேயே போராட்டம் நடத்தி வருகிறார்கள். தமக்குத் தனியான நாடு ஒன்றை — தமிழீழத்தை — அமைக்க முடிவு செய்திருக்கிறார்கள் என்பதை 1977ஆம் ஆண்டுத் தேர்தல் மூலம் சிறிதும் சந்தேகமின்றி எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

இப்போதும் கூட தமிழீழத்தை இலக்காக வைத்தே போராட்டம் நடத்தி வருகிறார்கள். தமிழீழத்துக்கு மாற்றீடாகச் சிங்கள மக்கள் எதனைத் தர விரும்புகிறார்கள் என்பது இன்னும் தெரியவில்லை.

இந்நிலையில், தமிழீழத்துக்கு மாற்றீடாகச் சமஷ்டி முறையைக் கொண்டு வந்து, தமிழர்களுக்குப் பிராந்திய சுயாட்சியை வழங்கினால் தமிழர்களை ஓரளவுக்கேனும் திருப்திப்படுத்த முடியும் என்று தென்னிலங்கைப் புத்திஜீவிகள் ஒரு சிலர் நம்புகின்றனர்.

நாட்டின் அரசமைப்பையே சமஷ்டி அரசமைப்பாக மாற்றுவதன் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் என்ற கருத்துக் கூடத் தென்னிலங்கையில் அரும்பத் தொடங்கியுள்ளது.

இவ்வேளையில், சமஷ்டி முறையைச் சிங்களவர்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று அமைச்சர் தொண்டமான் அபசகுனமாகக் கூறியுள்ளார். தான் சிங்களவர்களின் பிரதிநிதி அல்லது தலைவன் என்ற நிலையில் நின்று வேண்டாத வேடம் போட்டிருக்கிறார். ஒற்றையாட்சித் திட்டத்தின் கீழேயே தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று வக்காலத்து வாங்குகிறார். தமிழர்களை இரண்டாந்தரப் பிரஜைகளாகவே தொடர்ந்து வைத்திருக்கச் சூழ்ச்சி செய்யும் சிங்களத் தலைவர்களுடன் ஒத்தூதுகிறார்! அவர்களாகவே பேசுகிறார்.

1949 லேயே தமிழர்கள் சமஷ்டி கேட்கத் தொடங்கினர். ஆனால் சிங்களத் தலைவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை உண்மைதான். அதற்காகத் தொடர்ந்தும் அதே நிலை தான் இருக்க வேண்டும் என்று நியதியா?

உலகத்தில் — உலக அரசியலில் — எத்தனை மாற்றங்களும், திருப்பங்களும் உண்டாகி இருக்கின்றன. சமஷ்டி அமைப்புக்களே உடைந்து தனிநாடுகள் உருவாகி இருக்கின்றன. சிறுபான்மை இனங்களின் தேசியத்துவமும், சுயநிர்ணயமும் அங்கீகரிக்கப்படும் புதிய போக்கு — புதிய யுகம் — புலர்ந்திருக்கிறது.

இதனை உணராமல் சிங்கள அரசியல் தலைவர்களோ அல்லது சிங்கள மக்களோ பழைமையில் உழன்றால் அதற்கான விலையை அவர்கள் நிச்சயம் கொடுக்க நேரிடும்.

ஆனால் அவர்களுக்கு முன்னதாக அமைச்சர் தொண்டமான் முந்திரிக் கொட்டை மாதிரி முந்திக்கொண்டு அவர்கள் சார்பில் பேசுவது மெத்தவும் "மேதாவித்"தனம் மிகுந்தது.

ஆழ்ந்த அரசியல் அனுபவத்தால் நிதானமாகவும், நியாயமாகவும் பேசக்கூடியவர் என்று கருதப்பட்ட அமைச்சர் தொண்டமான் தமது பெருமையை அழிக்க முற்படுவது எதனால்? வயதுக் கோளாறா? பழைமை வாதம் இன்னும் அவரிடமிருந்து அழியாததனாலா? அல்லது தான் வகுத்த திட்டமே சிறந்தது என்ற தலைக்கனத்தினாலா? புரியவில்லை!

அரச சார்பு பத்திரிகையின் அறிவுறுத்து:

# இங்கேயே தீர்வு காணாவிடில் ஐ. நா. தலையிடும் சாத்தியம்!

### இனப்பிரச்சினை தொடர்ந்தால் இறைமைக்கு ஆபத்து

கொழும்பு, செப். 24

இனப்பிரச்சினைக்கு நாம் உள்நாட்டிலேயே தீர்வு ஒன்றைக் காணத் தவறுவோமேயானால் அது ஐ.நா. தலையீட்டுக்காக வாதாடுபவர்களின் கரங்களையே பலப்படுத்தும்.

அரச சார்பு பத்திரிகையான 'சண்டே ஒப்சேர்வரில்' அனுருத்த திலகசிறி எழுதிய விமர்சனக் கட்டுரை ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

அக்கட்டுரையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

இனப்பிரச்சினைக்கு உள்ளூர்த் தீர்வு ஒன்றைக் காணத் தவறுவது, ஐ.நாவின் தலையீட்டைக் கோருகின்ற திட்டத்துக்கு அரசை நிர்ப்பந்திக்கும் முயற்சியைவிரைவுபடுத்தும். ஆகவே இனப்பிரச்சினை தொடருவது எமது இறைமைக்கு ஆபத்தானதாகும்.

துரதிர்ஷ்டவசமாக அதிகாரப்பரவலாக்கலுக்கான அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்று கண்ணுக்குப் புலப்படுவதாக இல்லை. சர்வகட்சி மாநாடு பிசுபிசுத்து விட்டது நாடாளுமன்றத் தெரிவுக் குழுவும் வெற்றிகரமான முறையில் செயற்படுவதாகக் காணப்படவில்லை. இருதரப்பு கருத்து உடன்பாடு காணுவதில் சிங்கள, தமிழ் அரசியல் கட்சிகள் தோல்வியடைந்துவிட்டன. அதன் பலனாக அரசியல் தீர்வுகாணும் நடைமுறை விரும்பித நிலைக்கு வந்துள்ளது.

இந்த முட்டுக்கட்டையை உடைத்தெறிந்து, அரசியல் தீர்வுக்கான நடைமுறையை மீண்டும் ஆரம்பிக்க மூன்றாவது சக்தி ஒன்று எமக்குத் தேவைப்படுகின்றது.

மேற்கத்திய புத்திஜீவிகளின் பொதுவான நம்பிக்கைக்கு முரணாக, அந்த மூன்றாவது சக்தி வெளிச் சக்தியாக இருக்கத் தேவையில்லை மூன்றாவது சக்தி உள்நாட்டுச் சக்தியாக இருக்க வேண்டும்; இருக்க முடியும்.

இவ்வாறு அந்த விமர்சனக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-எ)

# ஈழத்தில் அல்லலுறும் தமிழரை ஏமாற்றிவிட்டார் ஜெயலலிதா

### திருநாவுக்கரசு குற்றச்சாட்டு

தென்காசி, செப். 24

தமிழக மக்களை ஏமாற்றியது போல, ஈழத்தில் அல்லலுறும் தமிழ் மக்களையும் ஏமாற்றி விட்டார் ஜெயலலிதா.

தேர்தலுக்கு முன்னர் தான் முதலமைச்சராக வந்தால் "தனி ஈழம்" வாங்கிக் கொடுத்து விடுவது போன்று கூக்குரலிட்ட ஜெயலலிதா இன்று கோட்டையை விட்டு வெளியே வர பயந்து நடுங்குகிறார்.

முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு இவ்வாறு கூறியுள்ளார்.

தென்காசியில் தி.மு.க பிரமுகர் ஒருவரின் இல்லத்தில் இடம்பெற்ற திருமண விழாவில் அவர் உரையாற்றும் போது மேற்கண்டவாறு கூறினார்;

திரு. வை. கோபாலசாமி எம்.பி தலைமையில் நடந்த விழாவில் எம். ஜி. ஆர். - அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான திருநாவுக்கரசு மேலும் சொன்னதாவது:-

இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு உதவினால் அது பெருங்குற்றம் என்பது போன்று சிலர் பேசி வருகிறார்கள்.

#### எம். ஜி. ஆர். உதவி

எம். ஜி. ஆர். முதலமைச்சராக இருந்த போது ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் போட்டி போட்டு ஈழத்தமிழர்களுக்கு உதவி வந்தன. அரசு கஜானாவிலிருந்து 4 கோடி ரூபாவை ஈழத்தமிழர்களுக்குக் கொடுத்தார் எம் ஜி ஆர். இன்னும் மற்றவர்களுக்குத் தெரியாமல் ஏராளமாக உதவி இருக்கிறார்.

ஆனால் இன்றைய முதல்வர் ஜெயலலிதா எங்களை ஏமாற்றியது போன்று தமிழ்நாட்டு மக்களையும் ஏமாற்றி ஈழத் தமிழர்களையும் ஏமாற்றி விட்டார்.

தேர்தலுக்கு முன்பு ஜெயலலிதாவின் பேச்சும், பேட்டிகளும் விடுதலைப் புலிகளே நம்பும் வகையில் இருந்தன. அவர் (ஜெயலலிதா) தமிழகத்தில் முதல்வராக வந்தால் தனி ஈழம் வாங்கிக் கொடுத்து விடுவார் என்று நம்பும் வகையில் பேசி வந்தார். ஆனால் இன்று கோட்டையை விட்டு வெளியே வர பயந்து கொண்டு பழியை விடுதலைப் புலிகள் மேல் போட்டு வருகிறார்.

நாம் ஈழத்திலுள்ள விடுதலைப் புலிகள் பற்றியோ, போராளிகள் பற்றியோ கவலைப்பட வேண்டியது இல்லை; அவர்களுக்குத் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளத் தெரியும் ஆனால் அங்கு வாழும் அப்பாவித் தமிழர்களுக்கு ஆதரவு கொடுத்து காக்க நாம் கடமைப்பட்டு இருக்கிறோம் — என்றார். (ஓ)

வட தமிழீழப் பகுதிகளில்

## காலபோக பயிர்ச்செய்கை திட்டமிடல்வேலை ஆரம்பம்

காலபோக பயிர்ச்செய்கைத் திட்டமிடல் ஒன்றினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தின் விவசாயப் பகுதி தற்பொழுது தயாரித்து வருகின்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய வட தமிழீழப் பகுதிகளை உள்ளடக்கியதாக இந்த காலபோக செயற் திட்டம் தயாரிக்கப்படுகிறது.

எதிர்கால சந்தை வாய்ப்பு, தேவையான உள்ளீடுகள் உரிய காலத்தில் கிடைப்பதை உறுதி செய்தல் ஆகிய முக்கிய நோக்கங்களைக் கருத்தில் கொண்டு இந்தப் பணி தற்பொழுது மேற்கொள்ளப்படுகின்றது.

இது தொடர்பாக விவசாயத்துறை அறிஞர்கள், நிர்வாகிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், விவசாயிகள் ஆகியோர் பங்குபற்றும் கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் நடத்தப்படவுள்ளதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தினரின் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது. (ஓ-ம)

## கிளிநொச்சி, முல்லையில் 'கெல்ற்' வகுப்பு இல்லை

### மாணவர்கள் பெரிதும் பாதிப்பு

பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறத் தகுதிபெற்றுள்ள மாணவர்களுக்கு நடத்தப்படும் 'கெல்ற்' ஆங்கில பயிற்சி வகுப்புகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் இம்முறை நடத்தப்படவில்லை எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏனைய மாவட்டங்களில் இப்பயிற்சி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. பயிற்சி பெறும் மாணவர்களுக்கு நாளாந்த வேதனமும் வழங்கப்படுகிறது.

இந்த நிலையில் — கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் இருந்து பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றவர்கள் மேற்படி பயிற்சியை இழப்பதுடன், தமக்குக் கிடைக்கவேண்டிய வேதனத்தையும் இழக்க வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

இது குறித்து கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளரிடம் கேட்டபொழுது — போதுமான தேவையான ஆசிரியர்கள் இல்லாமையே காரணம் என்று தெரிவித்தார். (ஓ-ம-97)

## இராணுவத்தினர் இருவர் கைதாகினர்

கொழும்பு, செப் 24

இரகசியப் பொலீஸார் எனக் கூறி கொள்ளுப்பிட்டியில் உள்ள ஹோட்டல் ஒன்றை நள்ளிரவு நேரத்தில் சோதனையிட முயன்ற இரு இராணுவத்தினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் இராணுவ கமாண்டோப் பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை செய்த பொலீஸார் மேலும் ஒருவரையும் விசாரணைக்கு உட்படுத்தி உள்ளனர். (ஓ-ம)

## ஹர்ஷாத் மேத்தா பிணையில் விடுதலை

புதுடில்லி, செப் 24

இந்தியாவின் மிகப்பெரும் நிதி ஊழலில் சம்பந்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பெரும் புள்ளியான ஹர்ஷாத் மேத்தா 10 லட்சம் ரூபா பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பங்கு மார்க்கட் ஊழல் தொடர்பான குற்றச்சாட்டின்பேரில் இவர் கடந்த 110 நாட்களாக சிறையில் பலத்த பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருந்தார். (ஓ-ம)

## பனாட்டு உற்பத்தி

யாழ்ப்பாணம், செப். 24

வவுனியா மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினரின் பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றியம் பனாட்டு, பனங்களி, பனம் பழம் என்பவற்றை தற்பொழுது கொள்வனவு செய்து வருகிறது.

அங்கு ஒரு கிலோ பனாட்டு 15 ரூபாவாகவும், ஒரு கிலோ பனங்களி 5 ரூபாவாகவும், மூன்று விதைகளுடன் கூடிய பனம்பழம் ஒன்று ஒரு ரூபா 50 சதமாகவும் தற்போது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் உற்பத்திக் குழுக்களின் மூலமும், பனை, தென்னை அபிவிருத்திச் சங்க விற்பனை நிலையங்கள் மூலமும் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது. (ஓ-ம)

## பொன்னெழுத்தில் வாழ்கின்ற புதுமைப் புலி திலீபன்!

இராகம்: செஞ்சுருட்டி — தாளம்; ஆதி

பல்லவி

திலீபனைப் போலொரு தியாக சொரூபனைத்
தேடிடல் இயலாதே — உலகினில்

அனுபல்லவி

இந்தியப் படையணிக்கும் இலங்கைப் படையணிக்கும்
எதிரான சவாலாக அகிம்சைப் போர் நடாத்திய
(திலீபனைப்)

சரணம்

ஈராறு நாள்கள் நீர்கூட அருந்தாமல்
இன்னுயிர் போக்கிய இலட்சிய வீரனவர்
போராளர் மத்தியிலே புதுமைப் புலியாகப்
பூவுலக வரலாற்றில் பொன்னெழுத்தில் வாழ்கின்ற
(திலீபனைப்)

தாயகம் மீட்கின்ற தன்மானப் போரினிலே
ஆயிரக் கணக்காக அழிந்திட்ட வேங்கைகளின்
தூயதோர் தலைவனாய்த் தோழருடன் குதூகலித்துத்
துலங்கியே தமிழீழம் வாழ்கவென வாழ்த்துகின்ற
(திலீபனைப்)

— க. இருஷ்ணபிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் நுட்பக் கல்லூரிக்கு புதிய மாணவர் சேர்க்கப்படுவர்

யாழ். தொழில் நுட்பக் கல்லூரிக்கு புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பம் விரைவில் கோரப்படவுள்ளதாக கல்லூரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கான தகவல்கள் கொழும்பிலிருந்து தற்பொழுது எதிர்பார்க்கப்படுகின்றன.

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் ஒவ்வொரு வருடமும் சுமார் 800 புதிய மாணவர்கள் பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவது உண்டு.

விண்ணப்பங்களின் அடிப்படையில் எழுத்துப்பரீட்சை, நேர்முகப் பரீட்சை என்பன இடம்பெற்று தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு ஜனவரியில் பயிற்சி நெறிகள் ஆரம்பமாகும். [ஒ-ம]

# மரண அறிவித்தல்கள்

## பிறின்ஸ் ஜேசுதாசன்

(முன்னாள் இலங்கை வர்த்தக வங்கி உத்தியோகத்தர்)

பிறின்ஸ் ஜேசுதாசன் காலமாகிவிட்டார். அன்னார் அனபெல்லா அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கபிரியேல் ஜேம்ஸ் - முத்தம்மா ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பற்றிக் - மில்ரெட் ஆகியோரின் அன்பு மருமகனும் ரெஜய்சி, ஜெராட் மரியநாயகம் (உதயன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பியற்றிஸ் அரசநிலை (கனடா), பிரான்சிஸ்பற்றிக் (இளைப்பாறிய அரச உத்தியோகத்தர்), அன்ரன் பற்றிக் (அரசாங்க அச்சகம்), டோறல் (தபால் அதிபர், களுவாஞ்சிக்குடி), பத்மினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரவி அரசநிலை அவர்களின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல 23, கதிர்ரல் வீதி, இல்லத்திலிருந்து இன்று (24-09-92) பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். பரி. கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி

இல 23, கதிர்றல் வீதி,
யாழ்ப்பாணம்.
[இ/3404]

## காராளபிள்ளை தர்மலிங்கம்

(நியூ றஞ்சனாஸ் உரிமையாளர்).

கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட காராளபிள்ளை தர்மலிங்கம் 22-09-92 செவ்வாய்க்கிழமை காலை காலமானார்.

அன்னார் தவமணியின் அன்புக் கணவரும், யோகாம்பிகை (வவி) (வேம்படி மகளிர் கல்லூரி, பழைய மாணவி), கண்ணபரமாத்மா (கண்ணன்) (வைத்தீஸ்வரா மகா வித்தியாலயம், பழைய மாணவன்), தர்மலஷ்மி (தர்மா) (கொக்குவில் இராமகிஷ்ண சாரதா மகளிர் கல்லூரி, உயர்தரவகுப்பு மாணவி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (24-09-92) காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி தவமணி.
(மனைவி)

நந்தாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
[22654]

## திருமதி மங்களேஸ்வரி இரத்தினவடிவேல்

(விதவா உதவி அரசாங்க அதிபர் பணிமனை, சண்டிலிப்பாய்)

சிரணி, சண்டிலிப்பாயைச் சேர்ந்த மங்களேஸ்வரி இரத்தினவடிவேல் 23-09-92 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற க. இராசரத்தினம் (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்), நாகம்மா இராசரத்தினத்தின் அன்பு மகளும், வள்ளியப்பர் இரத்தினவடிவேலின் (உதவி தபால் அதிபர் முல்லைத்தீவு) அன்பு மனைவியும், கலைவாணியின் (மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவி) அன்புத் தாயாரும், ஜெயமாலினி மனோகரன் (சுவி, நோர்வே), சந்திரலீலா சிற்றம்பலம், மகேஸ்வரி சண்முகநாதன், தேவமலர் ரவீந்திரன் (டென்மார்க்), நாகேஸ்வரி செல்வரட்ணம், இராஜேஸ்வரி புஸ்பநாதன் (கொழும்பு), காலஞ்சென்ற விக்னேஸ்வரி, காலஞ்சென்ற இரத்தினபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், குரும்பசிட்டி புலோலியைச் சேர்ந்த திரு, திருமதி வள்ளியப்பரின் அன்பு மருமகளும், தருமலிங்கம் சரஸ்வதி பொன்னுத்துரை தவரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், மோகனராஜ், லிலி, திலீபன், ராஜி ராஜபாலன், ரதி, ஸ்ரீசங்கர், இவசந்திரன், கிருஸ்ரி ஆகியோரின் பெரிய தாயாரும், சுஜேந்திரன் (சுவிஸ்), சுபநேசன், தெய்வேந்திரன், பாலேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24-09-92) காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. இரத்தினவடிவேல்
(கணவர்)

சிரணி,
சண்டிலிப்பாய்.
[22649]

## காங்கிரஸ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அமளி சுமார் அரை மணி நேரம் நீடித்தது.

கேள்வி நேரம் முடிந்தவுடன் காங்கிரஸ் எம்.எல்.ஏ. பீற்றர் அல்போன்ஸ் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்ப முயன்றபோது சபாநாயகர் அதற்கு அனுமதி மறுத்ததைத் தொடர்ந்தே சபையில் அமளி ஏற்பட்டது.

### வாக்குவாதம்

பின்னர் இருதரப்பினருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

தவறான வார்த்தையைப் பிரயோகித்ததற்காக தாமரைக்கனியை தற்போதைய கூட்டத் தொடர் முடிவடையும் வரை சபைக்கு வரக்கூடாது என்று சபாநாயகர் உத்தரவிட்டார்.

அதனைத் தொடர்ந்து சபாநாயகரின் ஆசனத்தின் முன்னால் அமர்ந்திருந்த இந்திரா காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் தமது இருக்கைக்குத் திரும்பிச் சென்றனர்.

அதன் பிறகு பேசிய முதலமைச்சர், காங்கிரஸ் உறுப்பினர்களில் சிலர் ஏதாவது நோக்கத்துடன் செயல்படுகின்றார்களோ என்ற ஐயம் தமக்கு ஏற்படுவதாகக் கூறினார்.

உடனே எதிர்க்கட்சித் தலைவர் பாலசுப்பிரமணியம் குறுக்கிட்டு, அப்படிப்பட்ட நோக்கம் எதுவும் தமது கட்சி உறுப்பினர்களுக்கு இல்லை என்று கூறினார். [இ-எ]

## 10 படை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணிவெடியில் இருப்பதை ஒத்திருப்பதாக பகுப்பாய்ந்து அறியப்பட்டதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் விநியோகிக்கப்பட்ட அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட ஏனைய தகவல்கள் வருமாறு:-

★ இச்சம்பவத்தில் படை அதிகாரிகள் பயணம் செய்த வாகனம் இராணுவத்தினரால் சோதனை செய்யப்பட்டு, பாதுகாப்பானது என்று உறுதி செய்யப்படாத வீதி வழியே சென்றிருக்கிறது.

★ கண்ணிவெடியில் சிக்கிய வாகனத்தில் விவேகமின்றி பத்துப் படை அதிகாரிகளுக்கு மேற்பட்டவர்கள் பயணஞ் செய்துள்ளனர். பாதுகாப்பான வீதியைத் தவிர்த்து பாதுகாப்பானது என்று உறுதி செய்யப்படாத வீதி வழியே இந்த வாகனம் சென்றிருக்கின்றது. [அ-எ]

## கிளாலியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தப்பமுயன்றனர் என்றும்—

ஒரு படகோட்டி தலையில் காயமுற்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

காயமுற்ற படகோட்டியை நோக்கி படையினர் தொடர்ந்தும் சுட்டனர் என்றும்—

எனினும் அவர் காயத்துடன் கஷ்டப்பட்டு தண்ணீருக்குள் சுழியோடித் தப்பினார் என்றும் கூறப்படுகிறது.

காயப்பட்ட — பருத்தித்துறை சக்கோட்டையைச் சேர்ந்த — வல்லிபுரம் விஜயகுமாரை (வயது 27) மற்றைய ஓட்டிகள் ஒருவாறு மீட்டு வந்தனர். அவர் தற்போது யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார் (உ-15)

## இளவாலை...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி திரு ஜேன் பிராங் கோயி சங்க, செல்வி மரிஜோ ஆகியோர் இக் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

இன்று மாலை அவர்கள் யாழ்ப்பாணம் திரும்புவர் [illegible]

(இ-17-15-3)

# பௌதிகவியல் மீள்பரீட்சை: அனுமதி அட்டைகள் வரும்

கொழும்பு, செப். 24

ஜி.சி.ஈ. உயர்தர வகுப்புக்கான பௌதிகவியல் II மீள்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சைத் திணைக்களத்தினால் தற்பொழுது அனுப்பப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இப்பரீட்சை அக்டோபர் மாதம் 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

அனுமதி அட்டைகளில் குறிக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையங்களை பரீட்சார்த்திகள் தகுந்த காரணங்களின் அடிப்படையில் மாற்ற விரும்பினால், அது குறித்த விண்ணப்பத்தை பூரண விவரங்களுடனும் கொழும்பு மலே வீதியிலுள்ள பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்புதல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

[ஒ-ம]

## குருநகரிலும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்.

கடற்புலிகளின் ஆதரவில் குருநகர் சனசமூக நிலைய முன்றலில் நூற்றுக் கணக்கானோர் உண்ணாவிரதம் இருந்தனர்.

### அச்சுவேலியில்

அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர் பகுதிகளில் திலீபன் நினைவு நிகழ்வுகள் உணர்வு பூர்வமாக நடந்து வருகின்றன. அச்சுவேலி பஸ் நிலையத்தில் அலங்கரிக்கப்பட்ட சித்திரத் தேர் ஒன்றில் தியாகி திலீபனின் உருவப் படம் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்படுகிறது.

இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் அங்கு பயிற்றுவிக்கும் ஆசிரியர்களும் மற்றும் மாணவர்களும், ஊழியர்களும் சேர்ந்து உண்ணாவிரதம் அனுஷ்டிக்கவுள்ளனர்.

### தொழில் நுட்பக் கல்லூரியில்

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் அவையினர் திலீபன் நினைவு நிகழ்வுகளை நாளை காலை 8.30 மணிக்கு கல்லூரி சரஸ்வதி மண்டபத்தில் நடத்தவுள்ளனர். விசேட நிகழ்ச்சிகளாக மு. வே வாஞ்சிநாதனின், "திலீபனுடன் இறுதிப் பன்னிரு நாட்கள்" என்ற கவி உரையும், தென்மராட்சி மாணவர் அமைப்பு வழங்கும் "தியாக தீபம்" என்ற நாட்டிய நாடகமும் இடம்பெறும்.

வடமராட்சி விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட திலீபன் நினைவு விழா இன்று பி. ப. 3 மணிக்கு மாலிசந்தி கின்னத்தம்பி வித்தியாலயத்தில் இடம்பெறும்.

(அ-15-162-17-51-165-11)

## சிரேஷ்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரத்து நெரிசலும் மிக்க கொம்பனித்தெரு — யூனியன் பிளேசில் — இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

தியோபிலஸ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படும் வழியில் மரணமானார். அவருடன் காரில் கூடச்சென்ற மகளும், கார்ச் சாரதியும் காயம் எதுவுமின்றித் தெய்வாதீனமாகத் தப்பிக் கொண்டனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் இருவரும் தப்பிவிட்டனர்.

கொலையுண்ட இன்ஸ்பெக்டர் தியோபிலஸ் நீண்டகாலம் மட்டக்களப்புப் பகுதியில் பொலிஸ் இன்ஸ்பெக்டராகப் பணியாற்றியவர்.

[அ]

## பிரேமா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனப்பிரச்சினைக்கு பிரேமதாஸா ஒருவரால்வேயே தீர்வு காண முடியும் என்று பல தமிழர்கள் எண்ணுவதாக பி.பி.ஸி. தனது நேற்றைய செய்தி கண்ணோட்டத்தில் தெரிவித்தது.

[இ-5]

# மரண அறிவித்தல்கள்

## பேதுரு இன்னாசி

(அரச ஒப்பந்தகாரர் காரைநகர்)

காரைநகரை பிறப்பிடமாகக் கொண்டவரும், இலகடி தொல்புரம் கிழக்கில் தற்போது வசிப்பவருமான பேதுரு இன்னாசி அவர்கள் காலமாகிவிட்டார். அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும், அருள்பாலன் (மட்டக்களப்பு), சந்திரமலர் (முல்லைத்தீவு), கிருபைமலர் (ஆசிரியை செல்மேரிஸ் பாலர் பாடசாலை, கோப்பாய்), யோகிமலர் (ஜெயபுரம்), அருள்நேசன் (இந்தியா), ஜெயமலர் (ஆசிரியை சிறுவர் பாடசாலை நீர்வேலி), டேசிமலர், அருள்றோகான் ஆகியோரின் அன்புத் தகப்பனும், பாலசிங்கம், தேவநாயகம் (கூட்டுறவு அலுவலகம், யாழ்ப்பாணம்), சத்தியா ஆகியோரின் மாமனாரும், சுதாகரன், சஞ்சீவன், கருணராஜ் ஜெயகாந் ஆகியோரின் பேரனும் ஆவார்.

நல்லடக்க ஆராதனை இன்று (24-09-92) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வட்டுக்கோட்டை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி பிள்ளைகள்

இலகடி,
தொல்புரம்.
[5344]

## ஜூட் ஜெயரூபன்

சில்லாலையைச் சேர்ந்த ஜூட் ஜெயரூபன் நேற்று நண்பகல் அகாலமரணமானார்.

இவர் சவரிமுத்து மேரி ஜோசப் பொன்ராசா — திரேசா புஷ்பம் ஆகியோரின் அருமை மகனும், விக்டர் ஜெயக்குமார், சாவெற் ஜெயந்தகுமாரி, ஸ்ரீபன் ஜெயசீலன், இபேட் ஜெயசாந்தன், சாவெற் துஷாந்தகுமாரி, சாவெற் கிறிஷாந்தகுமாரி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் புனித மரி அன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் அன்னாரின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
ச. இ. வேதநாயகம்

3, கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.
[22655]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 24-09-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org